1989 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினையின்கீழ் இது வராது. கருத்துக் கூறுவதற்கு உங்களுக்கு அடுத்துப் பேச வாய்ப்பு அளிக்கிறேன். அப்பொழுது பேசுங்கள். ஒழுங்குப் பிரச்சினையின்கீழ் இது வராது. உங்களை உட்காரச் சொன்னால் பிறகு நன்றாக இருக்காது.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே விற்பனை வரி விதி விலக்கைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர், திரு. இரகுமான்கான் அவர்கள் இரண்டு மூன்று விவகாரங்களைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் ஒரு ஒப்பந்தத்தை போட்டு இருபதாண்டுக் காலத்திற்கு முன்பு—முதலமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள்; ஆகவே, அதைச் சொல்லுகின்றேன்—Basic Oil, Indian Oil Corporation-க்குப் போகும்பொழுது அதற்கு சேல்ஸ் டாக்ஸ் கிடையாது என்பதற்கு ஒப்பந்தத்தைப் போட்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் எப்படி வரி விதிக்கிறார்கள் என்று பார்த்து, ஒருவேளை மற்ற மாநிலங்களில் வரி விதித்தால் நீங்களும் இங்கே வரி விதிப்பீர்களேயானால் சேல்ஸ் டாக்ஸ் சட்டத்தைத் திருத்துவீர்களேயானால் கொஞ்சம் அதிகம் உங்களுக்கு வருவாய் கிடைக்குமென்பதை இந்த நேரத்தில் இங்கே நான் சொல்லுகின்றேன்.

4. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

சென்னையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் ஆந்திரப் பகுதியிலிருந்து திரும்ப அரசு நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 110-வது விதியின்படி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஓர் அறிக்கையைப் படைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள்மீனவர்களைக் குறித்து ஆந்திரப் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்றபொழுது 25 பேர் திரும்பி வரவில்லை என்ற ஒரு பிரச்சினையை இங்கே எழுப்பினார்கள். அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையையும், செய்தியையும் இங்கே அறிக்கையாக வைக்க நான் முன்வருகிறேன்.

ஆந்திரப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற 25 மீனவர்கள் திரும்பி வரவில்லை என்ற தகவல் வந்தது. இவர்களுள் மொத்தம் 9 பேர், ஒரு குழுவினர் 5 பேராகவும், இன்னொரு குழுவினர் 4 பேராகவும் ஏற்கனவே திரும்பி வந்து விட்டார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 1

காவல் துறை ஆய்வாளர் தரத்தில் ஒருவர் ஆந்திராவிற்கு உடனடியாக அனுப்பப்பட்டு விசாரித்ததில் நெல்லூரிலேயிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள பொன்னுபேடு என்ற கிராமத்தினர் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களைப் பிடித்து அல்லூர் என்ற காவல் நிலையத்திலே ஒப்படைத்துள்ளதாகவும், தற்போது அல்லூர் காவல் நிலையத்தில் 16 (Sixteen) தமிழக மீனவர்கள் இருக்கின்றார்கள் என்றும் தெரிய வந்தது. காவல்துறைத் தலைவர், காவல் துறைக் கண்காணிப்பாளர் மட்டத்தில் இரு மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இன்று மாலையே இந்த 16 மீனவர்களும் விடுவிக்கப்பட்டு சென்னை வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு ஒரு விதிமுறை தெரியும் என்று நினைக்கிறேன். 110–வது விதியின் கீழ் ஓர் அறிக்கை படைக்கப்பட்டால் அதைப்பற்றி எந்த ஒரு விவாதமும் இல்லை என்ற விதி உங்களுக்குத் தெரியாதா என்ன ?

3. வரவு-செலவுத் திட்டம், 1989-90 பொதுவிவாதம்—தொடர்ச்சி.

*திரு. கே. ஆர். இராஜேந்திரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தமிழக சட்டசபையில் இன்றைக்கு பட்ஜெட் மீது பேசுகின்ற ஒரு நிலைமைக்கு வாழ்க்கையில் என்னை உயர்த்திவிட்டுச் சென்ற எங்கள் இதய தெய்வம் அமரர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் அஞ்சலியைச் செலுத்தி, எங்களை வழி நடத்திச் செல்லும் கழகப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கி என் கன்னிப்பேச்சினைத் துவக்குகின்றேன்.

திட்டங்கள் தீட்டுவதில் வல்லவர், நிர்வாகத் திறமையில் சிறந்தவர் என்று பெயர் பெற்ற நமது முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் 1989–90-க்கான வரவு-செலவுத் திட்டத்தை மிகுந்த ஆவலோடு நான் எதிர்பார்த்தேன். ஆனால் ஏமாற்றம்தான் அதிகம்.

இந்த பட்ஜெட்டிலே ஏழை, நடுத்தர வர்க்கம், விவசாயிகள், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை மீட்பு, புதிய முற்போக்கான தொழில்கள் போன்றவற்றிற்கு ஏற்றதான திட்டங்கள் கடுகளவும் அமையவில்லை. சுருங்கச்